**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **CC. 182/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.5 செந்தில்@ செந்தில்குமார்** |
| **Father's Name** | : **அய்யர்கோன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2021

மு.வி:

நான் இடையப்பட்டியில் குடியிருந்துவருகிறேன். நான் அரசு பேருந்தில் ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். எனக்கு அசா1,அசா2.அசா3 மற்றும் இறந்துபோன் சாட்சி சிவக்குமார், சாட்சிகள் 6 மற்றும் 7 ஆகியோரை தெரியும். சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு இடையப்பட்டி சமுதாயகூடத்தில் அசா1 பாண்டிவீட்டில் புதுமனைபுகுவிழா விசேஷத்திற்கு நான் சென்று இருந்தேன். விசேஷ வீட்டில் அசா2 சாட்சி பாலகிருஷ்ணன் மொய் எழுதிகொண்டுருந்தார். எதிரிகளில் இரண்டு மூன்று நபர்கள் பணம் ˙கொடுக்காமலே சில்லரை கேட்டு வாங்கியுள்ளார்கள். ஆயிரமோ, இரண்டாயிரமோ அவ்வாறு பணம் கொடுக்காமல் சில்லரை வாங்கியுள்ளனர். அவ்வாறு ஏமாற்றி சில்லரை வாங்கிய நபர்கள் வெளியே சென்று அங்கே இருந்த காரில் ஏற்கனவே காரில் இருந்த இரண்டு மூன்று நபர்களுடன் தப்பிசென்றார்கள். விசேஷ வீட்டில் இருந்தவர்கள் அவர்களை உசிலம்பட்டியில் மடக்கிபிடித்து காரையும் பணத்தையும் எதிரிகளுடன் பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையொப்பம் அசாஆ4. போலீசார் என்னை விசாரணை

செய்தார்கள்.

கு.வி.

முதல் விசாரணையில் சொன்னது போல் போலீசாரிடம் சொல்லிஉள்ளீர்களா என்று சொன்னால் சொல்லியுள்ளேன். சம்பவத்தை நேரடியாக நீங்கள் பார்க்கவில்லை என்று சொன்னால் பார்த்தேன். ஏமாற்றி சென்ற இரண்டு மூன்று நபர்களை துரத்திசென்று பிடித்த நபர்களை தெரியுமா என்று சொன்னால் தெரியாது. உசிலம்பட்டியில் எந்த இடத்தில் காரையும் எதிரிகளையும் பிடித்தார்கள் என்று தெரியுமா என்று சொன்னால் தெரியாது. அசா1, மற்றும சாட்சி பாலகிருஷ்ணன் உங்களது உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே விசேஷ நடந்த இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் ஏமாற்றி சென்ற நபர்களையும் பிடித்தவர்களையும் யார் என்று உங்களுக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d./ Senthil @ Senthilkumar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.